செய்தித் தாளாகப் பதிவுபெற்றது; வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஅ] யாழ்ப்பாணம்: நள ஹூ ஆவணி மீ கஅ-உ வெள்ளிக்கிழமை (3-9-1976) [இல: உஉ

## செல்வச் சந்நிதிப் பெருமானிடம் பஜனைப் பாதயாத்திரை

செல்வச் சந்நிதி தேர்த் திருவிழாவில் கலந்துகொள்ளும்பொருட்டு அடியார்கள் பாதயாத்திரை நல்லூரிலிருந்து ஆரம்பமாகவிருக்கிறது. ஆவணி 21 ஆம் - நாள் (6-9-76) திங்கள் இரவு 7 மணிக்கு பஜனை யாத்திரை தொடங்கும். நல்லூர்ப் பஜனைச் சபையும் பிறபல சபைகளும், அன்பர்களும், யாத்திரையிற் கலந்துகொள்வர்.

உ
சிவமயம்

### சைவ பரிபாலன சபை
### யாழ்ப்பாணம்

## 87-வது
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

சைவ பரிபாலன சபையினது பொதுக் கூட்டம் நள வருடம் ஆவணி மாதம் 27-ஆம் தேதி (12-9-76) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்

திருநீறு அணிந்து கொள்ளல்
தேவாரம்
1. சென்ற வருடாந்தக் கூட்ட வரலாறு
2. சென்ற விசேட பொதுக்கூட்ட வரலாறு
3. (A பிரிவு) நிருவாக சபை அங்கத்தவர் வேட்பாளர் பெயர்கள் ஏற்றல்.
4. சைவ பரிபாலன சபையினது செயற்குழுவின் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்
5. 1974 — 75-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்குகள்
   (அ) சைவ பரிபாலன சபை
   (ஆ) சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
6. தலைவர் நிறைவுரை
7. A பிரிவு நிருவாகசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல்
8. புது வருட உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்
9. பிரேரணைகள்
10. வேறு விடயங்கள்
11. காரியதரிசி நன்றியுரை
தேவாரம்.

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம், 16-8-76. வை, இரகுநாதமுதலியார் கௌரவ காரியதரிசி.

முக்கிய கவனிப்பு
1. வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 6-9-76 க்கு முன்னர் காரியதரிசிக்கு அனுப்பப் பெறுதல் வேண்டும்.
2. கணக்கு சம்பந்தமான வினாக்கள் 6-9-76 க்கு முன்னர் தனாதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.
3. சந்தாப் பணத்தை 31-7-76-க்கு முன் பாக்கி இன்றிச் செலுத்தியவர்களே வாக்குரிமை உடையவர்களாவார்கள்.

## சேர். கந்தையா வைத்தியநாதனும் திருக்கேதீச்சரமும்

அருள் . தியாகராசா
(இ, ஒ கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி,

முன்வளர்ச் – 2

சென்னைச் சைவ சித்தாந்த சமாஜம் சென்ற எழுபது ஆண்டுகளாகச் சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றி வருகிறது. இச் சமாசத்தின் முதலாவது ஆண்டுவிழா 1905-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் நடந்தது அவ்விழாவிற்கு வள்ளல். சேர். இராமநாதன் அவர்களே தலைமை தாங்கினர். அதன் பின்னர் சேர் அம்பலவாணர் கனகசபை, வட்டுக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர், முதலியோர் ஈழத் திருநாட்டிலிருந்து சென்று தலைமை தாங்கினர்கள். இச் சமாசத்தின் 49 ஆவது ஆண்டு விழா தமிழ் நாட்டிலுள்ள விருதுநகரில் 1954-ம் ஆண்டில் நடந்தபோது, சேர் கந்தையா வைத்தியநாதன்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### மகா கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி சிவகாமி சமேத ஆனந்த நடராசர் திருக்கோயில் புனராவர்த்தன திருச்குடத் திருமஞ்சனம் (மஹாகும்பாபிடேகம்) ஆவணித்திங்கள் 21 ஆம் நாள் (6-9-76) திங்கட்கிழமை திருவோணநட்சத்திரமும் திரயோதசித் திதியும் கூடிய சுபதினத்தில். பகல் 10-55 மணிமுதல் 11-45 மணி வரை வரும் விருச்சிக லக்கின சுபவேளையில் நிகழும் என ஷை சைவ வளர்ச்சிக் கழகத்தினர் அறிவிக்கின்றனர்

### துர்க்காதேவி தேர் உலா

வருகிற ஞாயிற்றுக்கிழமை தெல்லிநகர் துர்க்கா தேவிஆலயத்தில் தேர்விழா வழமை போல மிக அலங்காரமாக நிகழ இருக்கின்றது.

தேவி காலை ஒன்பது மணிக்குத் தேரில் எழுந்தருளும் காட்சியும் பகல் ஒரு மணிக்குத் தேரில் இருந்து வசந்த மண்டபம் நோக்கும் காட்சியும் அரிய நிகழ்ச்சிகளாகும்

இ. பேர். ச. வினர் இவ் விழாவுக்கு விசேட சேவை அமைக்க இருக்கின்றனர்.

## பண்ணிசை
### பாரெங்கும் பரவட்டும்

ஊர்காவற்றுறை தான்றோன்றி மனோன்மணி அம்பிகை ஆலய சித்திரத் தேரோட்டத்தன்று ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள்தலைமையில் ஆதீனப் பண்ணிசைக் குழுவினர் காலை 9 மணி முதல் திருமுறை பஜனை நடாத்தவுள்ளனர்.

ஆதீனப் பண்ணிசைக் குழுவினரின் நிகழ்ச்சிகள் நிகழவிருக்கும் இடங்கள் வருமாறு:—

கொய்யாத்தோட்டம் விநாயகர் ஆலயத் திருவிழாவில் (5-9 76) பண்ணிசை ஆசிரியர் நிகழ்ச்சியை நடத்துவர்.

வவனியா சுத்தானந்த இளைஞர் சங்கத்தின் கலாச்சார மண்டபத் திறப்பு விழாவில் (6-9-76) ஆதீனப் பண்ணிசைக் குழுவின் நிகழ்ச்சி இடம்பெறும். ப. இ. ஆசிரியர் திருஞான சம்பந்தனும் மாணவிகளும் பங்குகொள்வர்.

x x x

மயிலிட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா 4-ஆம், 7-ஆம் நாட்களில் யாழ். திருமுறைமன்றத்தினரும், யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினம் திருமுறைப்பஜனை நடாத்தினர். திரு க சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களும், சைவப் பெரியார் பண்டிதர் கா. நமசிவாயம் அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர்.

ஆலயவிழா உபயகாரர்களும் நிர்வாகிகளும் இப்போது பண்ணிசை நிகழ்ச்சிகளை நடாத்துவதில் நாட்டங்கொண்டிருப்பது நற் பயன் தருமென்பதற் கையமில்லை, பண்ணிசை நிகழ்ச்சி பாரெங்கும் பரவ வேண்டும் என்னும் நோக்கோடு தொண்டு செய்வதில் ஆதீனம் பெருமுயற்சிகள் செய்து வருகிறது நவீனதப்பிசைகளைத் தவிர்த்து பண்டைய பண்ணிசையை எங்கும் பரவச் செய்வது யாவரதும் கடனன்றோ! "ரகு"

## சைவர்களைப் பாதுகாப்பது தெய்வத் திருமுறைகளே!

— ஸ்ரீ கி. பி. ஹரன் அவர்கள்

சைவத்தையும் சைவர்களையும் பாதுகாப்பது தெய்வீகத் திருமுறைகளே. அவற்றைத் தினசரி பாராயணம் செய்வதனால் மனத்துக்குச் சாந்தியும் பேரின்பமும் உண்டாகும். அவற்றை மனனஞ் செய்து இராகத்துடன் பாடுவது மட்டும் போதாது. சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லி அவற்றிலுள்ள உபதேசங்களைப் படித்து எவ்வளவுக் கெவ்வளவு நடக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு இம்மைக்கு மட்டுமன்று மறுமைக்கும் பயன் அளிக்கும் உதாரணமாக ஐந்தெழுத்து மந்திரத்தின் பயன்களைப் பற்றி தேவார திருவாசகங்களும் திருமந்திரம் முதலிய திருமுறைகளும் இடித்து இடித்துக் கூறி வற்புறுத்துகின்றன. "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்றும், "குலமிலராயினும் குலத்துக்கேற்றதோர் நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே" என்றும் இன்னும் பலவும் கூறியுள்ளனர். "நானேயோ தவம் செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்" என்கிறது மணிவாசகம். ஆனாலும் நம்மில் எத்தனை பேர் இந்தத் தெய்வீக மந்திரத்தில் நம்பிக்கை கொண்டு அதைத் துணையாகக் கொள்ளுகன்றோம்? நாம எவ்வளவோ புண்ணியம் செய்து சைவர்களாகப் பிறந்தும் சைவக் குரவர்கள் கூறியுள்ள நல்லுபதேச மொழிகளை பின்பற்றாவிடில் நமக்கு எவ்விதம் இன்பம் சுரக்கும்?

"மனைவி, தாய், தந்தை, மக்கள் மற்றுள சுற்றமெனும் வினையுளே விழுந்தழுந்தி வேதனைக்கு இடமாகாதே கனையுமாகடல் சூழ் நாகைமன்னு காரோணத்தானை நினையுமா வல்லீராகில் உய்யலாம் என்கிறார் அப்பர் சுவாமிகள் பொக்கம் பேசி நம்மில் பலநும் பொழுதைக் கழிக்கின்றோம் நமக்குத் துக்கம் தீரும் வகையைச் சொல்கிறா வாகீசப் பெருந்தகை தக்கன் வேள்வி தகர்த்தே தழல்வண்ணன் நச்சன் சேர் நல்லம் நன்னுதல் நம்மையே என்று நம் துக்கல் தீரும் வகைகளை தெளிவாகச் சொல்லுகிறார். அவ்வளவும் செய்து நம துக்கங்களையும் அரசியல் உள்ளிட்டு பலபிரச்சனைகளையும் தீர்த்துக்

வளர்ச்சி 2-ம் பக்கம்

### உலக இந்து இளைஞர்பேரவை உதயம்

கைதடி சைவ அநாதர் இல்லத் திறப்பு விழாவிற் கலந்து கொள்ள வந்து மலேசிய இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதிகளும் இலங்கை இந்து இளைஞர் பேரவையினரும் ஒருங்கு கூடி உலக இந்து இளைஞர் பேரவை என்ற ஓர் சமாசத்தை உருவாக்க உத்தேசித்து ஒரு அமைப்பை கிறுவினர்.

மலேசிய நாட்டுத் திரு. க, சச்சிதானந்தம் இதன் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றார்.

### இந்துஇளைஞர் சங்கம் தெல்லிப்பளை

கைதடி எழுச்சி விழாவிற் கலந்துகொண்ட தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத்தினர் மலேசிய நாட்டு இந்து இளைஞர்களைத் துர்க்காதேவி ஆலய தரிசனம் செய்ய அழைத்து ஆங்கு திருமுறை மடத்தில் ஒரு வரவேற்பளித்தனர். திரு. அ. ஜெயரத்தினம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இன்னும் பலர் வரவேற்புரையாற்றினர் மலேசிய இந்து இளைஞர் திரு, குமரகுரு வரவேற்புக்கு மகிழ்ச்சி கூறினர்.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே:
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ ஆவணி மீ கஅ-உ வெள்ளி

## பொருத்தமான கருத்துக்கள்

கைதடி சைவ அநாதர் இல்லத் திறப்புவிழா வொடியைந்து நடந்த எழுச்சி மாநாடும் இதர கருத்தரங்கங்களும் செய்முறை வகுக்கும் மெய் வழியை உணர வைக்கும் பான்மையினவாகும்.

திருக்கேதீச்சரத் திவ்விய தலத்திலிருந்து தெய்வீக மயமுடன் ஊர் உலாத் தொடங்கியமை இந் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் நன்னயமாயமைந்திருந்தது

சைவ அநாதர் இல்லத்தில் மெய் வருந்திச் சிவ தொண்டர்கள் ஆற்றிய அருப்பணியின் பேருக நிகழ்ந்த பேருரைகள் கருத்துக் கலந்துரைகள் யாவும் சிந்தனையை ஊக்குவிக்கும் திறலமைந்தனவாகப் பொலிந்தன.

இன்னும் மேலாக ஆங்கு நிறைவேற்றப்பெற்ற உறுதி மொழிகள் சைவ மக்களுக்கு வழிகாட்டும் செயற்றிட்டமாகும் தரம் வாய்ந்தவையெனலாம்,

திருக்கேதீச்சரம் திருக்கோணேஸ்வரம் என்னும் தேவாரப் புகழ் பொலிந்த கோயில்கள் புனித பூமியாக அரச ஆணை பெற வேண்டுமென்ற முடிபு மிக மிக முக்கியமானது. முன் யாம் பல முறையும் திருக் கோயில்கள் யாவும் புனித நிலையங்கள் என்ற புறம்பான தரத்தைப் பெற வேண்டுமென்றும் ஆங்கெல்லாம் ஆகாச் செயல்கள் சட்டமூலமாகத் தடுக்கப்பட வேணடுமென்றும் கருத்துரைத்திருந்தோம். ஆலயம் வேத சிவாகம முறைப்படி எங்குண்டோ ஆங்கது புனிதமயமாய் அமைதல்வேண்டும். மக்கள் ஆட்சி முறையில் இந்த எண்ணம் அரச ஆணையாக இருத்தல் வேண்டும் அல்லவா?

மேலும் அத்தகைய புனித நிலையங்களில் விழாக்கள் பொலிவுறவேண்டும். ஆனால் சமய ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குள்ளாக வேண்டும.

ஒலி பெருக்கி என்ற ஒரு கருவி இக்காலத்தில் வாழ்கையைக்கு இன்றியமையாததாய விட்டது. மந்த்ரம் வாய் மலர்நதாலும் உட்கோயிலில் ஒலிபெருக்கி உட் புகுகின்றதே, அதே ஒலி பெருக்கி புறத்தே திரைப்படப் பாடல்களை அலை அலையாக ஓசை மீட்கின்றதே; என்ன விபரீதம்!

மின் விளக்கும் இவ்வாறே தன் ஆட்சி செய்கின்றது. திருகேதீச்சரத்தில ஆதி மூலத்தில் மின் விளக்கு அமைக்கப்படவில்லை. இதுவன்றோ விதி, நெய் விளக்கு நின்று ஒளி செய்யும் நீர்மையென்ன! மின் விளககு மேவும் ஒளியின் விபரீதமென்ன?

இன்னிசை நிகழ்ச்சிகள் என்ற போர்வையிற் புன்னெறி வேடிக்கைகள் மலிந்து வருகின்றன. களியாட்ட விழாவாகத் திருவிழாவை மாற்றி விடுகின்றனர் சிலர். இவற்றையெலலாம் இந்து இளைஞர் பேரவையினர் கணடித்து நன்னெறிக்கு வழிகாட்ட எடுத்திருக்கும முடிவுகள யாவற்றையும் சைவமககள் முன்னின்று செயலாற்றுதல் கடமையாகும்.

## சைவர்களைப் பாதுகாப்பது

1ம் பக்கத்து வளர்ச்சி

கொள்ள நாம் எப்போது நம்பிக்கையுடன் முயலப் போகிறோம்.

திருமுறைகள் கூறும் உபதேச வழிகளைப் போற்றி அதன்படி நாமும் நடப்போமாயின் சைவர்களாகப் பிறந்ததின் பயனைப் பெற்று நமது பலபல பிரச்சனைகளும் நல்லபடி தீர்ந்து இன்பமே எந்நாளும் துன்பமில்லாமல் வாழலாம். அவ்விதம் நாம் நடக்கத் திருவருள் நமக்குத் துணைசெய்யுமாக.

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் பலப்பல மணிவாசக விழாக்களைக் கண்டது. காரைநகர் மக்கள் திருவாசகத்தில் நன்கு ஊறிப் போனவர்கள் திண்ணபுரம் இந்து இளைஞர் மன்றத்தினர் எடுக்கும் திருமுறை விழாவை, மணிவாசக விழாவின் தொடர்பான [illegible] எண்ண வேண்டும். [illegible] மேன்மைகொள் சைவநீதி

ஈழத்தில் மட்டுமன்றி உலகெலாம் விளங்க உதவுமாக. உடலால் வரமுடியாவிடினும் உள்ளத்தால் அங்கு [illegible]

## திருப்பணித் தொண்டராய்த் திகழ்ந்த சைவசீலர்

### கேதீச்சரத் திருப்பணிச் சபைத்தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள்

மகா கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும் கண்டு களித்துக் காலன் கையில் அமைந்த சைவத் திருவாளர் திரு. சோமசுந்தரம் அவர்கள் வயதாலும் வாழ்க்கை வளத்தாலும் மத சேவையாலும் வயது வந்தவர். ஆரம்பத்தில் விவேகானந்த சபையின் காரியதரிசியாகப் பணியாற்றிப் பின் கொழும்பு இந்து சமயச் சங்கங்களிற் கடமை புரிந்து ஈற்றில் திருககேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவராகப் பத்தாண்டுகள் நற்பணி புரிந்தவர் இப் பெரியார்.

சேர். கந்தையா வைத்தியநாதன் விட்டுச் சென்ற திருப்பணியைத் தொடர்ந்து நன்கு புரிந்து மகாகும்பாபிஷேகத்தை நிறைவேற்ற வழி வகுத்த சீலர் இவர்.

எண்பத்தொன்பதாண்டுகள் வாழ்ந்த இவர் வாழ்வாங்கே வாழ்ந்தனர். அறுபத்தைந்தாண்டுகள் சட்டத்தரணியாகத் தொழில் பார்த்தவகையில் தனிப் பெருமை பெற்றனர். நீதி நெறி வழுவா நேர்மைச் சட்டத் தரணியென்ற புகழ் படைத்தவர்.

தமிழர் விளையாட்டுக் கழகத்திற் சிலிய காலம் வரைக்கும் பலவேறு பதவிகள் வகித்து அச் சமூகத்தை வளர்த்த இவர் பந்தெறியும கலையிலே திறமை வாய்ந்தவராகக் கணிக்கப்பெற்றனர்.

சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பல காலம் திறமையுடன் கடமை புரிந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் காந்தி சங்கத்தின் தலைவராக அகிம்சை வழியையே நம்பி மக்கள் வாழ வேண்டும் என்று வற்புறுத்திக் காந்திய இலட்சியத்தில் நின்று வந்த பெருமைக்குரியவர்.

ஆலய வழிபாட்டில் ஆரா ஆர்வம் உடையவராய்த் தென்னிந்திய யாத்திரை பல காலும் செய்துள்ளனர். நல்லூர்க் கந்தன் கோயில் விழாக்களைத் தவறாது தரிசித்து வந்த இவர் கல்லூரைப் பிறப்பகமாகக் கொண்டவர்.

அவர்கள் அரும்பணி நினைவு என்றும் நிலவும்.

### சேர். கந்தையா . . .

[1ம் பக்க வளர்ச்சி]

அவர்கள் தலைமை வகித்துச் சிறப்புற நடத்தி வைத்தார்கள். இச்சமாசவிழாவிற்கு அவரின் உதவியாளராகச் சென்று கண்டு களிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது,

சேர்; வைத்தியநாதனவர்களுக்கு திருக்கேதீஸ்வரத்தின் பெருமையையும் புகழையும் உலகறியச் செய்ய வேண்டுமென்ற அவா, நெடுங் காலமாக அவருடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. அதன் பொருட்டுச் சென்னைச் சைவ சித்தாந்த சமாசத்தின் 55 வது ஆண்டு விழாவைத் திருக்கேதீஸ்வரத்தில் 1960 ம் ஆண்டில் நடத்த வேண்டுமென்று விருப்பி அதற்குரிய வழியில் முயன்றார். அந்தமகாநாடு 1960ம் ஆண்டு கடைசி மாதத்தில் மிக்க உன்னத முறையில் திருக்கேதீச்சரத்தில் நடந்தேறியது இம்மகாநாட்டிற்குத் தென்னாட்டிலிருந்து பலபெரியார்கள் வருகை தந்தார்கள். இம்மகாநாட்டிற்கிரிய முழுச்செலவையும் சேர் வைத்தியநாதனவர்கள், தாமே பொறுத்துக் கொண்டார்கள் இது அவருடைய தியாகசிந்தைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்,

(வளரும்)

### திண்ணபுரச் செய்தி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

(தொகுப்பு: வேற்குமரன்)

நான்காம் நாள் விழாவுக்கு வைத்திய கலாநிதியும் சமாதான நீதிபதியுமாகிய திரு. சு. இராசசேகரம் அவர்கள் தலைமை தாங்கினர். அவர் தமது தலைமையுரையில் "சைவர்களாகிய எம்மவரிற் பலர் பெயரளவிலே தான் சைவர்களாக வாழ்கிறார்கள். திருமுறைகளையோ, புராணங்களையோ நன்கு ஓதுகின்றார்களில்லை. சைவப் பேரறிஞர்களின் சொற்பொழிவுகளை கேட்டு சமய அறிவை பெருக்குகின்றார்களோ என்றால் அதுவுமில்லை இதனால் மக்கள் மத்தியில் நாஸ்திகம் என்னும் நோய் தோன்றப்பார்க்கின்றது. இந்நோய் தோன்றுமாயின் மக்கள் மாக்களாக மாறி உலகிலே அமைதியின்மை தாண்டவமாடத் தொடங்கிவிடும். என்று கூறிய முடிவுரையில் 'சுபீட்சமாக வாழ்வதற்கு ஒவ்வொரு சைவனும் தினந்தோறும் ஒருமணி நேரமாவது திருமுறைகளை ஓதுதல் வேண்டும் என்றார் அன்றைய தினம் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் "சேக்கிழார் தந்த புனித காவியம்" என்னும் பொருள்பற்றியும், தண்ணபுரத்தை சேர்ந்தவரும், ஈழத்துச் சிதம்பர தேவத்தான ஆதீனகர்த்தாவுமாகிய திரு து. முருகேசு அவர்கள் 'ஒன்பதாம் பதினொராம் திருமுறைகள்" என்னும் விடயத்தை பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்

காரைநகர் திண்ணபுரத்தின் வரலாற்றில் பொன் எழுத்தால் பொறிக்கப்படக் கூடியதாக நடைபெற்ற இந்த திருமுறை விழாவினை பாராட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னை நாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் அவர்களும், கொழும்பு - காரை அபிவிருத்தி சபை தலைவர் திரு. A. S. S. இராசரத்தினம் அவர்களும் அகில இலங்கை இந்துமாமன்ற உதவிச் செயலாளர் திரு ஜ. தி. சம்பந்தன் ஆகியோரும் காரைநகர் மணிவாசகர் சபையும் காரைநகர் முத்தமிழ் மன்றமும் செய்திகள் அனுப்பினார்கள். அவர்களுடன் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள்,

திண்ணபுரத்தில் திருமுறைக்
குத் தெய்வ விழா
பண்ணருவி பாயஅருள்
பாலித்த - புண்ணியத்தால்
நாடுசிறக்க நடுநிலைமை
நீதி நெறி
பீடு பெறுக பெரிது;

என்ற பாடலை எழுதி அனுப்பினார்கள். ஈழநாடு ஆசிரியர் ஸ்ரீ கெ. பி. ஹரன் அவர்கள் பின்வரும் வாழ்த்துச் செய்தியை அனுப்பினார்கள்.

## ஆதீன சமயப் பணி

யாழ். புதுவீதி கொய்யாத் தோட்டம் ஞான செல்வவிநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா முதல் நாள் (5-ட) நல்லை ஆதீன சமயப் பணி நிகழ்ச்சியாக ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளின் அருளுரையும் திரு வே சபாபதிப்பிள்ளை அவர்களின் சொற்பொழிவும், பண்ணிசைப்புலவர் திரு ஆர். திருஞானசம்பந்தன் அவர்களின் நிகழ்ச்சியும் திரு. எஸ், அரியநாயகம் அவ களின் புகலாங்குழல் இசைநிகழ்ச்சியும் இடம் பெறும்.

ந. தி,

நேயர் நெஞ்சம்

## ஆவணி மூலவிழா

ஆசிரியர்,
"இந்துசாதனம்"
ஐயா,

2-9-76 ஈழநாட்டில் ஆவணிமூல விழா நள ஹூ ஆவணி 17-ஆம் திகதி வியாழக்கிழமை எனக் குறிக்கப் பெற்றிருக்கிறது. இலங்கை இந்தியா முதலிய சிவாலயங்களில் (2-9-76) வியாழக்கிழமைதான் ஆவணி மூல உற்சவம் நடைபெற்றது.

செ. இராசதுரை,
சாஸ்திரியார்,
வாக்கிய பஞ்சாங்க கணிதர்,
2-9-76. கொக்குவில்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. MB 13118

றி எ. இராசையாப்பிள்ளை கைம்பெண் எலிசபெத் முத்தம்மா, கரம்பொன் தெற்கு ஊர்காவற்றுறை வழக்காளி

எதிராக

1. குழந்தைவேலு செல்லத்துரையும்
2. பெண் அன்னம்மாவும் இருவரும் வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம்.
3. தில்லைநாதர் நாகலிங்கம் சரவணை ஊர்காவத்துறை
4. ஆறுமுகம் திருநாவுக்கரசுவும்
5. பெண் கண்ணம்மாவும்
6. அந்தோனிப்பிள்ளை கிருஸ்தியாம்பிள்ளையும்
7. மாணிக்கம் தேவயோகராஜாவும் உல்லோரும் ஊர்காவத்துறை

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B. 13118-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பினனை விபரிக்கப்படும் 2 துண்டுக் காணி, 1976-ம் ஹூ ஐப்பசி மீ 27 உ புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 3760-ம் 17-5-72 தொடக்கம் 23-7-74 வரைக்கும் ரூபாய் 3760-க்கு 12 வீத வட்டியும் அதனபின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 596 ரூபா 65 சதம.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி ஊர்காவத்துறை கோவிற்பற்று சரவணை இறை: உப்பன நெ ப. 7, 1/16 கல்வீடும, கிணறும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு முருகேசு குமாரவேலு பெண் பகேஸ்வரியின ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு பின்னால் காணும் அம்பலவாணர் பெண் பார்வதியின் ஆதனம் இதடங்கலுட்படி 381 / 161.

ஷை இறை: உப்பன நி பர 2½ இதில் வடக்குப்பக்கமாக நெ பர. 1 ஒன்று குளி 11, 15/16 பதினொன்றே முககாலே அரைகலே வசம். எலலை கிழக்கு அம்பலவாணர் பெண் பார்பதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள வடக்கு எங்களில் 2 ம பேருக்குரிய ஆதனம் மேலே / சொல்லிய மேற்கு ஒழுங்கை. தெற்கு தில்லையர் நாகலிங்கத்தின் ஆதனம் இதடங்கலும்.

**இ. கனகரத்தினம்**
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்

35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 12686

துரையப்பாபத்தர் கோபாலசாமி 35, கன்னாதிட்டி ரோட் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

1. வைத்திலிங்கம சுப்பிரமணியமும்
2. ஜெகசோதி இருவரும் பருத்தித்துறை ரோட், நல்லூர்.
3. சுபபிரமணியம சூரியதேவனும்
4. மனைவி லீலாவதி இருவரும மல்லாகம்
5. கணபதிப்பிள்ளை நடராசா 92 பருத்தித்துறை ரோட், குருநாதசுவாமி கோவிலடி.

-எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 12 86-ம் இலக்க வழக்கில எனககுக் கிடைதத கோட்டுக்கட்டளைப்படி, பினனால் விபரிக்கப்படும 1 துண்டுககாணி, 1976-ம ஹூ ஐப்பசி மீ 25 உ 25-10-76 புதன்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விறகப்படும்.

## தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 2795 யும் 9-8-71 தொடக்கம் 19-2-73 வரைக்கும் ரூபாய் 2000 வுக்கு 12 வீத வடடியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 556 ரூபா 15 சதம.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்றிக் வலிகாமம கிழக்கு கோப்பாய் கோவறபறறு இருபாலை இறை (நாவல் ஒல்லை அல்லது நாவலடி) எனறும் அழைக்கப்படும காணி நி பர 3 புதுக்ககட்டப்பட்ட வீடும், கிணறும் செய்பயிர், வான்பயிர்களும் எலலை கிழக்கு பாலசுப்பிரமணிய சுவாமி கோவில், வடக்கு காலஞ்சென்ற பாககியலட்சுமி கந்தசாமியின் உரிமைககாரர், மேற்கு விசுவநாதன் கின்னத்தம்பியும் மனைவி பாலசௌந்தரி, தெற்கு குமாரசுவாமியும் பாலசுப்பிரமணியசுவாமி கோவில்.

**இ. கனகரத்தினம்,**
கொமிஷனரும விலைமதிப்பாளரும

353, கொழும்புத்துறை வீதி
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்

# கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இல. 542 / ஈடு

அருளம்பலம் கனகசுந்தரம் — தெல்லிபபழை கிழக்கு

எதிராக வழக்காளிகள்

இராசையா பத்மகாந்தன் தெல்லிப்பழை கிழக்கு காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசையாவின் சொத்துக்கு சட்டபூர்வமான பிரதிநிதியாக. எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட கோட்டின் ஈடு 542-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1976-ம் ஆண்டு கார்த்திகை மாதம 17-ம திகதி புதன்கிழமை (17-11-76) முற்பகல் 10-00 மணிக்கு முதலாம் காணியும முற்பகல் 10-30 மணிக்கு, இரண்டாம காணியும் அந்தந்தக காணிக்குள் நின்று என்னால் பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய 19,034 - 90 சதமும் 30-8-74 தொடக்கம் 31-10-75 வரைக்கும் ரூபாய் 11,000க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுக்குச் செலவு ரூபா 728 - 72 சதம்.

## ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று. மல்லாகம் இறை கிருலலை கிளுவனை நிலப்பரப்பு 1 குழி 9¼ கடை கட்டிடமும் கிணறும். எலலை கிழக்கு ஒழுங்கை. வடக்கு ரோட்டு மேற்கு சுப்பிரமணியம் கைம்பெண் இராசம்மாவும் ஆதனம் தெற்கு செல்லத்துரை பெண் சாந்திமதியின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

2. மேற்படி வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பறறு தெல்லிப்பழை. கிழக்கு இறை தெல்லியர்பற்றை நிலப்பரப்பு 10 7/8 கிணறும. எல்லை கிழக்கு அருளம்பலம் மகாதேவனுக்கும் வயிரவநாதர் தெய்வநாதனுக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு ஒழுங்கை. மேற்கு செபஸ்தியாம்பிள்ளை, கைம்பெண் கனகம்மாவுக்கும் பரஞ்சோதி பெண குணபூரணத்துக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு பரஞ்சோதி பெண குணபூரணததுக்குரிய ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

**ஆ. போ. எதிர்மன்னசிங்கி**
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்

[illegible]
யாழ்ப்பாணம், 17-8-7.

# ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
கரவெட்டி மேற்கு அருளப்பு சேனாதிராசா கைம்பெண் ஞானப்பிரகாசி

இல ஈடு: 12512 எதிராக வழக்காளி

1. கரவெட்டி மேற்கு பொரியன யேரசேப்பு
2. பெண் லூர்த்தம்மா

எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் தரித்த கோட்டால் எனக்குக் கிடைத்த அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1976-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டை வேலிக் கோயிற்பற்று கரவெட்டி வதிரிக் குறிச்சியிறை "அம்மியொல்லை" நிபர 16 3/8 ஆனால் ஆட்சியிலிருக்கும் நிபர 13 குளி 6 எல்லை கிழக்கு வேலன் பெண் வள்ளிக்கும் மறுபேருக்கு முடையாவாதனம் வடக்கு யோசேப் ஆசிர்வாதத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் மேற்கு கிறிஸ்தோ அருளானுக்கும் மறுபேருக்கு முடையவாதனம் தெற்கு சீமாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை தம்புவின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கு முடையவாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவையடங்கலிற் சொரியலாய் நிபர 3 குளி 15-ல் அரைவாசியும்

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 7?70 00 |
| இதில் ரூபா 4000/க்கு 6-11-73 தொடக்கம் 22-11-1974 வரை 8 வீத வட்டி | ரூபா | 833 75 |
| | | 7603 75 |
| ரூபா 7603 75 க்கு 23-11-74 தொடக்கம் 23-7-76 வரையும் 5 விதவட்டி | ரூபா | 506 86 |
| கோட்டுச் செலவு | ரூபா | 365 87 |
| மொத்தம் | ரூபா | 8475 88 |

ரூபா 8475-88 க்கு 23-7-76 தொடக்கம் 29-9-76 வரையும் 5 வீத வட்டியும் கோட்டால் ஏற்கப்பட்ட பெறுமதி ரூபா — ரூபா 10,500/-

"உமாபதி"
நெல்லண்டை ரோட்,
துர்பனை,
பருத்தித்துறை,
50 3-9-76

**R S. இராமநாதன் J. P**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்
Commissioner of Sales, Valuer and Auctioneer.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
இல: ஈடு / 224

காங்கேசன்துறை சின்னையா சோமசுந்தரம மாம்பிராய் — வாதி

எதிராக

காங்கேசன்துறை நடராசா நாகராசா மாங்கொல்லை — பிரதிவாதி

மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில் MB/224 இலக்க வழக்கில எனககுக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனால் விபரிக்கப்படும ஒருதுண்டுக காணியை 1976 ம ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ம் திகதி (17-9-76) முற்பகல் 10 மணியளவில் அந்தக காணிக்குள் நினறு பிரசித்த ஏலத்தில என்னால விறகப்படும.

தீர்வைத்தொகை: முதல வட்டி ரூபா 2625/-ம் 5-7-1974 தொடககம் 2-2-1975 வரைககும ரூபா 2000/- க்கு 10 வீத வட்டியும அதனபின முழுத் தொகைககும இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 369-70

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலுகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று பழை இறை கறண்டாப்பற்றை நில பரப்பு 2 குழி 8 இந்தப்பரப்பு இரண்டு குழி எட்டுக்கும் எல்லை கிழக்கு முத்தையா இரத்தினத்தினதனம வடக்கு ஆறு அடி அகல ஒழுங்கைமேற்கு ஒழுங்கை தெற்கு சின்னத்தம்பி குருநாத பிளளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலும் இன்னும் வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க் காலுரித்தும

**க. சிவஸ்கந்தா**
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும
மதிப்பாளரும.

நாகேந்திரமடம்
வட்டுக்கோட்டை 51 3-9-76

# ஒன்றிணைவோம்!

ஆலய விழாக்கள் அடியவர்களின் பக்தியுணர்வைப் பெருக்கும் வகையில் அமைந்து விளங்கச் செய்யவேண்டும். இதனை ஆலய நிர்வாகிகளும் விழா உபயகாரர்களும் ஒருமித்து தீர்மானித்து செயற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். திரு விழா என்றதும் ஊரை விட்டு ஒரு சில தினங்களுக்கு ஓடினாலோ என்ற நிலை சில பகுதிகளில் — இன்றும் இருந்து வருவதைக் காண முடிகிறது. இது மட்டுமா! இறைவன் ஆலயங்களில் ஆடு கோழி பலியிடும் அறியாமை சிலவிடங்களில் இன்னமும் ஓயவில்லை!

இந்த அநீதிகளை ஒழிக்கவும் ஆக்கபூர்வமான தொண்டுகளை நிலைநிறுத்தவும் ஆங்காங்கு சீலர்கள் தனித்து உழைத்தும் வெற்றி கிட்டியது என்று திருப்தி கொள்ள முடியாதிருப்பதைக் காண்கின்றோம்! இன்று உயிர்ப்பலி நடந்து வரும் ஆலயங்களின் விபரங்கள் திரட்டப்பட்டு அவ்விடங்களில் ஆன்மீகப் பிரசார மூலம் 'மேன்மை கொள் சைவ நீதி விளங்கச் செய்வது சைவ மக்களது தலையாய கடனன்றோ? இன்று புனித நகர்ப் பிரகடனம வேண்டும் என்றும், இதுபோன்ற நல்ல தீர்மானங்கள் பல தடவைகள் பலவிடங்களிலும் கேட்கப்பட்டனவாயினும் அவற்றைச் செயற்படுத்த ஆட்சியிலிருந்த அரசுகள் தவறியமையும், உரிய முறையிற் தட்டிக் கேட்க நம்மவர் விழையாததும் துரதிர்ஷ்டமென்றே சொலலலாம். இப்போது கைதடி சைவ எழுச்சி மாநாடு சில கருத்துக்களை கேட்கிறது இவைகளையும் இத்தகைய நற்பணிகளையும் எம் மினம் ஒருமித்துக் குரல் கொடுத்து செயற்படுத்துதல் பெரும் நன்மையாகும்

பழம்பெருஞ் சைவச் சபைகள். மன்றங்கள், அறிஞர்கள் ஒன்றிணைந்து திட்டந் தீட்டுவார்களாக,

கா. பரமேசுவரி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை, 2-9-76.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 13146

தீ. ஏ இராசையாப்பிள்ளை கைம்பெண் எலிசபெத் முத்தம்மா கரம்பொன் தெறகு ஊர்காவற்றுறை.

வழக்காளி

எதிராக

1. தம்பிப்பிள்ளை பொன்னுத்துரையும்
2. பெண் சரஸ்வதியும் இருவரும் புளியங் கூடல்; சரவணை ஊர்காவற்றுறை.

எதிராளிககள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின MB 13146-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1976-ம் ஹூ ஐப்பசி 27-ம் உ 27-10-76 புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 4017 ம் 30-5 73 தொடக்கம் 6-9-73 வரைக்கும் ரூபாய் 2600 க்கு 18 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 498 - 10 சதம் இதில் 2-1-73 1000மும் 6-4-75 ல் 1000/ மும் கோட்டுச் செலவு 250 ரூபா கொடுபட்டது.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை கொட்டையடியிற்கலகு நி. பர. 4 குளி 2¼ இதல் கிழக்குப்பக்கமாக நி. பர 3 (மூன்றும்) கிணறும் பனைகளும் தென்னைகளும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு ஒழுங்கை மேற்கு அம்பலவாணர் பெண் கனகம்மாவினதனம் தெற்கு முருகேசு பெண் இராசம்மாவினுதனம் இதடங்கலும்.

**இ. கனகரத்தினம்**
கொமிஷனர் விலைமதிப்பாளர்

35/2 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

அறி(வு) அறி(வு) என்ற அறிவும் அனாதி,
அறிவுக்(கு) அறிவாம் பதியும் அனாதி,
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி,
அறிவு பதியில் பிறப்பறும் தானே.

The soul called the knower (Pasu), God the Soul of souls (Pati) and bondage that binds the souls (Pasam), they are all beginningless. When Godliness gets implanted (in the soul, births (and deaths) cease.

Hindu Organ

Friday, September 3, 1976

## Exemplary Life Ends

RIPE old age, rich in religious devotion, dedicated to the service of country and creed, had reached its natural end. Sri S. Somasundaram ceased to exist as such only after he had worked for the successful completion of the restoration of Thiruketheeswaram Temple that was inaugurated by the Great Navalar fervently followed by Sri Pasupathi Chettiar, the Chettiars of the Kathiresan Temples of Colombo, Sri Sivapathasundarampillai and Sir Kandiah Vaithianathan. This is an achievement that brings credit to the Saiva Public for having entrusted the organisation to efficient devotees. An exemplary life has ended in the service to God.

Shri Somasundaram may be described as a veteran in every sphere of life. Sixty five years of steady practice in Law is a remarkable record. His emphasis on the need for full acceptance of the ideal of non-violence, a trait that is a sine qua non for religious practice is reflected in the selfless work he had done as President of the Gandhi Sangam. His association with the Vivekananda Society is yet another phase of his enthusiasm for service.

In the field of culture his dominating influence in the Tamil Union, as President, Captain of Cricket and administrative adviser had earned for him universal affection

Gentle, soft-spoken, gandhian in demeanour and deportment, Sri Somasundaram has left behind self-less service of a life time never to be forgotten and always to be emulated by all who endeavour to serve religion, language and culture.

## DEATH BEFORE DEATH

V. SUBRAMANIAM
Saiva-Pulavar

(Continued from last issue of 13-8-76)

Come, O mind. pack up all thy improprieties and from here inquire (for Truth). Oft art thou whirling and considerest not my thousand advices against thy evil nature. O perishing one! See thou! I will kill thee with the axe of Holy Grace. I will conquer thee. Once or twice in a day during the calm hours of the morning or night-fall one should sit in judgment over his mind reviewing the doings of the whole day, and censure the mind for any mis-behaviour. By a repetition of this process one will be able to witness the thoughts as they occur and check them then and there. Perseverance in this will result in the complete annihilation of the tendencies samskaras that raise such thoughts. With desires checked, tendencies destroyed, the mind attains the peace sought for.

(To be continued)

## The Jaffna Archaelogical Society

(Lecture by Dr. Michel Marliere)

(Continued from last issue)

A statue of Brahma on a pedestal adorned with his sacred geese has been re erected in the Sivaite temple of Phnom Krom together with a statue of Lord Siva and one of Lord Vishnu.

Thus it can be noticed that the cult of Civa was shared by such enemy brothers as were the Cham and the Khmers, that Lord Brahma was still figurated in stone, that the cult of Lo d Siva did not prohibit other worships from the precincts of His sanctuaries, whereas the cult of Lord Vishnu was more exclusive, as in contemporary Jaffna, that the cult of Lord Krishna was seemingly a popular one as in South India and in Jaffna to-day, that Lord Rama and his compani n were already the 2 stars 2 of local sensibility.

### Laos

Next door to over-populated Vietnam and formerly imperial Kampucha, the quiet and benevolent country of Laos expands on a territory equivalent to that of Great-Britain or Italy.

In Laos, the stupa of That Luang. three miles from Vientiane. can be said to offer an unusual example of transformation of the original Indian monument. As far as I know, it is the only place of interest as regards Indians or Ceylonese influence in the religious architecture of the former kingdom of millions of white elephants.

Notwithstanding this, the vihara and uposathasala of Northern Laes and more particularly those of Luang Prabang probably are the most elegant and elaborated ones in the whole Theravad in South East Asia.

### Thailand

Thailand is a very interesting example of Ceylonese influence and possibly the major one at national scale. As Prince M. C. Subhadradis Diskul wrote, "Sukhothai art, especially in Buddha images can be reckoned as the most original and beautiful among that artistic expressions. During this period, there was communication with the Buddhist sect from Ceylon and the Sinhalese artistic influence also prevailed at Sukhothai but more so on architecture than on sculpture". The Sinhalese influence is also considered to have been prevalent or at least strong in WAT Kukut "the remarkable analogy of which to the SAT MAHA PRASAMA of Sri Lanka has been pointed out by Claeys, as Quaritch Wales wrote. It is also very apparent in Nakorn Sri Thammarat (or Ligor), the ancient center of expansion of Therevadin Buddhism in Lop'buri, Nak'on Pathom, Ayuthia and even Dhonburi and Bangkok In the three latter sites, the term "remains" is not proper since the stupas are in a perfect state of conservation. More precisely, it might be mentioned that "In Lop'buri, Nak'on Pathom and Pong Tuk archaeological remains have been found which included stupa bases and monastic platforms recalling those of Anuradhapura. Incidentally, a Tamil inscription from the 12th century has been identified in Takuapar near Nakorn Sri Tha; arat by Prof; Filliozat.

(To be continued)

## Hindu Religious Ideals and Propaganda

1. One of the greatest needs of the hour is propaganda both in writing and orally regarding Hindu Religion and its sacred ideals. The entire fabric of Hindu Society rests on Religious worship and Religious way of Living, not only in theory but in Practices also, Even to make people worship both at home and temple and all other places, religious propaganda is required. A certain degree of work in this direction is done by individuals and organizations, much more remains to be done in a fast changing world under modern condition with the struggle for bare existing becoming more and more overous.

2. Individuals, organization, Temples and Trusts could make voluntary efforts to do their bes in this connection by organizing the necessary organs of propaganda and diffusion of religious and cultural ideals. Reserve funds of money with the capital sums always kept intact permanently and the income or interest therefrom only to be utilized could be created without delay — No central organization is necessary. It is impractical and unwise to put all the responsibility on any single organization or individual. Organizations like the Jaffna Saiva Paripalana Sabhai, the Vivekananda Society Colombo, the Hindu Congress, Hindu organizations in the Eastern and Central Provinces could separately and individually make a start. In the case of the Jaffna Saiva Paripalana Sabhai, the organization is functioning in the midst of a large Hindu population with long standing traditions, with several places of worship and the proximity of the Campus of the University of Sri Lanka with a special place for Hindu civilization. There are also certain religious trusts whose resources and assistance could be sought for and applied. A very urgent requisite is the creation of a special reserve Fund of a permanent character for the publication of Saiva literature by the Saiva Prakasa Press and the strengthening of the Hindu Organ and Inthusathanam. This step is indispensable and requires foremost attention. If substantial improvements are made in relation to these three concerns by the Sabhai, it will be one of the greatest services to the cause of Hinduism not only in Sri Lanka but in other parts of the world. If a start is made by the Sabhai, other institutions in other parts of the country would gradually follow the precedent. Centralization is impracticable, unworkable and unwise. The greatest service that the Sabhai could do is to apply its mind to this paramount need without delay.

S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva
Paripalana Sabhai

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday September 3, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org